**செ.வெ.எண்:23** **நாள்:10.10.2018**

## அரியலூர் மாவட்டத்தில் ரூ.55 இலட்சம் மதிப்பில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள் திறப்பு.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், வெத்தியார் வெட்டு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப்பள்ளியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வகக் கட்டிடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்கள் இன்று (10.10.2018) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

இப்பள்ளிக்கட்டிடத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் குத்துவிளக்கேற்றி, பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது,** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் வெத்தியார்வெட்டு ஆதிதிராவிடர் நல அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.55 இலட்சம் மதிப்பில் வேதியியல் ஆய்வகக் கூடம் மற்றும் இரண்டு வகுப்பறைகள் கட்டிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், உடையார்பாளையம் கோட்டாட்சியர் ஜோதி, துணை ஆட்சியர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) கதிர்சங்கர், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் குமரய்யா மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**